**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**

**O.S.No. 299 Of 2020**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | PW2 |
| **Name of the Witness** | : | அசோகன் |
| **Father's Name** | : | |
| **Age** | : | |
| **Occupation** | : | |
| **Address** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 13th day of August, 2025.

1மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :-

நான் பிளஸ் 2 வரை படித்துள்ளேன். நான் NLC யில் பணிபுரிகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி சுப்பிரமணியன் வேலை செய்யும் இடத்தில் பழக்கம். வாதி சுப்பிரமணியன் 1ஆம் பிரதிவாதியிடம் பணம் கொடுத்தது குறித்து சாட்சி சொல்ல வந்துள்ளேன். புரோநோட்டு எழுதுவதற்கு முன்பாக வாதி பணம் கொடுத்துள்ளார். அந்த தேதி எனக்கு தெரியாது. பணம் கொடுத்து வாங்கியதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். வாதி சுப்பிரமணியன் வாதசாஆ 9 புரோநோட்டில் கையொப்பம் போட சொன்னார் நான் போட்டேன். வாதி சுப்பிரமணியன் வீட்டில் வாதசாஆ 9 புரோநோட்டு எழுதப்பட்டது. புரோநோட்டு எழுதும் 1வது பிரதிவாதி வாதி மற்றும் அவரது மகன் இருந்தார்கள். சிவநேசன் என்பவது வாதி சுப்பிரமணியனின் மகன் ஆவார். வேறு யாரும் அங்கே இல்லை. வாதசாஆ 9 புரோநோட்டில் உள்ள கையொப்பம் 1வது பிரதிவாதி மூர்த்தியுடையது கிடையாது என்றாலும் நாங்கள் அதை தயாரித்துக்கொண்டோம் என்று

சொன்னால் சரியல்ல. 1வது பிரதிவாதி மூர்த்தி எந்த காலத்திலும் வாதியிடம் பணம் வாங்கவில்லை எங்னறு சொன்னால் சரியல்ல- நான் வாதி சுப்பிரமணியன் உறவு என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*